# வேதாகமவியல் (பாடம் - 4)

## வேதாகமம் தேவனுடைய வார்த்தைதான்

### இப்படி நம்புவதற்கான ஆதாரங்கள்

1. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தாங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்று சாட்சி பகருகிறார்கள். அவர்கள் கூறிய செய்தி தேவனுடைய செய்தியென்று அங்கீகரித்து இருக்கிறார்கள் (லூக்.1:70, அப்.3:31, 2 பேதுரு 1:21).

2. பரிசுத்த வேதாகமத்தில் 2500 தடவைகளுக்கு மேல் “கர்த்தர் கூறுகிறார்” என்னும் வார்த்தையைத் தீர்க்கதரிசிகள் பயன்படுத்தி இருக்கிறார்கள். (ஏசா.8:5, எரே.2:2, எசே.2:4).

3. பரிசுத்த வேதாகமம் முழுவதும் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய ஆள்தத்துவம், ஊழியங்கள், செய்திகள் ஆகியவற்றைப் பற்றியுமே முக்கியமாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும், ஊழியத்தையும் பற்றி நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அவையனைத்தும் புதிய ஏற்பாட்டு நூல்களில் நிறைவேறியுள்ளன.

4. இயேசு கிறிஸ்து தாமே, தாம் பிதாவால் அனுப்பப்பட்டவரென்று சாட்சி பகர்ந்தார். (யோவா.8:42, 7:16, 17:8).

5. தமது ஊழியத்தை உறுதி செய்யும் வண்ணமாக, இயேசு கிறிஸ்து ஏராளமான அற்புதங்களைச் செய்தார் (அப். 10:38).

6. இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனமாகக் கூறியுள்ள பல காரியங்கள் ஏற்கனவே நிறைவேறியுள்ளன. மற்றவை விரைவில் நிறைவேறும்.

7. பழைய ஏற்பாடு தேவனுடைய வார்த்தை என்றும், அதற்கு தெய்வீக அங்கீகாரமும், அதிகாரமும் உள்ளது என்றும் இயேசு கிறிஸ்து அங்கீகரித்திருக்கிறார். (மத்.5:17-18, 8:17, 12:40-42, லூக்.24:44, யோவான். 5:39).

8. பரிசுத்த வேதாகமம் அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தையும் அங்கீகரித்திருக்கிறது. அவர்கள் தெய்வீக வல்லமையினால் ஊழியம் செய்ததாக வேதாகமம் கூறுகிறது. அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் தேவன்

அவர்களுடைய ஊழியங்களை அங்கீகரித்தார். (மாற்.16:15-20, அப்.2:41-46, 5:1-1, எபி.2:14).

9. அப்போஸ்தலர்கள் தாங்கள் எழுதிய நூல்கள் அனைத்திலும் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களை உறுதி செய்திருக்கிறார்கள்.

10. பழைய ஏற்பாட்டு வசனங்கள் புதிய ஏற்பாட்டில் சுமார் 250 தடவைகள் நேரடியாக மேற்கோளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 850 தடவைகளுக்கு மேல் பழைய ஏற்பாட்டின் வசனக் கருத்துக்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன.

11. எஸ்தர், எஸ்றா, நெகேமியா, பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய பழைய ஏற்பாட்டு நூல்களைத் தவிர, மற்ற நூல்கள் அனைத்தையும் புதிய ஏற்பாடு மேற்கோளாகவும், கருத்துக்கோளாகவும் பயன்படுத்தியிருக்கிறது.

## புத்தகங்களின் தொகுப்பு

பழைய ஏற்பாடு காலங்களில் பல வேதப்பண்டிதர்கள் (SCRIBES) வேத ஆசிரியர்களினால் எழுதப்பட்ட புத்தகங்களை நகல் எடுக்கவும், காக்கவும், மொழியாக்கம் செய்தார்கள்.

தாவீது, சாலொமோன் காலத்தில் கி.மு. 1000ல் **யோசபாத்** மந்திரியாயிருந்தார்,(RECORDER) **("ரெக்கார்டர்" என்ற ஆங்கில வார்த்தைக்கு "பிரதி எடுப்பவர் அல்லது நகல் எடுப்பவர் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும்**) 1 சாமு.8:16, 1 இரா.4:3, 1 நாளா. 18:15,**எலிகோரேப்பும், அகியாவும்** சம்பிரதிகளாயிருந்தார்கள். (SCRIBES) தாவீதின் சித்தப்பா புத்தியும், படிப்புமுள்ள ஆலோசகனாகிய **யோனத்தான்** என்பவர் இருந்தார். (1நாளா. 27:32) இவர்களில் சிலர் தேவாலயத்தின் பணம் சம்பந்தமான கணக்குகளை கவனித்து வந்தார்கள். (2 இரா.12:10) தீர்க்கன் ஏசாயாவின் நாட்களில் சம்பிரதி (SCRIBE)**செப்னா** இருந்தார். 2 இரா.19:32 யூதர் பாபிலோனியர்களால் சிறைப்பட்டுபோன காலங்களில் மிகவும் பிரசித்திபெற்றவர் **எஸ்றா 7:6, 11.**

யூதர்கள் பழைய ஏற்பாட்டு புத்தகங்களை டநக் **(TANAK)** என்பார்கள். அதன்பொருள் **(TA)–தோரா** (பஞ்சாகமம்) **ந (NA)–** நபீம் (தீர்க்கதரிசிகள்) **க் (K)–** கேதுபீம் (எழுத்துக்கள், சரித்திரங்கள், பாடல்கள்) இதை இயேசு அங்கீகாரம் செய்திருப்பதை லூக்கா 24:44 ல் பார்க்கலாம். தோரா 5+ நபீம் 8 + கெதுபீம் 11 = 24 புத்தகங்கள்.

புதிய ஏற்பாடு காலங்களில் கி.பி. 500-1000 வரை மாசரைட்ஸ் (MASSORITES) என்பவர்கள் எபிரெய மொழிக்கு உயிர் எழுத்துக்களை (Vowels) கொடுத்தார்கள். அதற்கு முன்பு எபிரெய மொழிக்கு உயிர் எழுத்தில்லை. (உதாரணத்திற்கு பிராம் என்பது, எபிரெயத்தில் **ஆபிரகாம்** என்றும், அதையே அரபியில் **இப்ரஹீம்** என்றும், சமஸ்கிருதத்தில் பிராமின் என்றும் வெவ்வேறு விதங்களில் அழைத்தார்கள். ஆகவே, பழைய எற்பாட்டு வேதபாரகர்களும், புதிய எற்பாட்டு மாசரைட்ஸுகளும் நமது வேதாகமத்தை காப்பாற்றுவதற்கும், நகலெடுக்கவும் வெகுவாக பங்கெடுத்தார்கள்.

## கேனான்

## அளவுகோல்

## CANONICAL ORDER

பரிசுத்த வேதாகம ஆசிரியர்கள் நமது வேதத்தை தொகுப்பதற்காக உபயோகப்படுத்தின முறைதான் கேனான். கிரேக்க மொழியில் கேனான் என்பது லெவல் (Level) அல்லது அளவுகோல் (Ruler) எனப் பொருள்படும். இதை தச்சர்கள் பயன்படுத்துவார்கள், வேதபாரகர்கள் பயன்படுத்தும் கருவியுமாகும். இதனால் கேனான் என்பது நடத்தையின் அளவுகோல் அல்லது விசுவாசத்தின் அளவுகோல் என்பதையும் குறிக்கும். இந்த அளவுகோல் வேதாகமத்தில் அங்கீகரிக்கப்பட்ட 66 ஆகம தொகுப்பையும் குறிக்கும். இப்பதத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர் “அத்தேநேசிஸ்” என்னும் ஆதி சபைப்பிதா ஆவர். கேனான் என்ற அளவுகோலின் அடிப்படையிலேயே வேதத்தின் 66 புத்தகங்களும் தொகுக்கப்பட்டன. அவைகள் தொகுக்கப்படுவதற்கான விதிமுறைகளை தேவ மனிதர்கள் குறித்திருந்தனர்.

## விதிமுறைகள்

வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன. இவற்றை வேதாகமமாகக் கோர்க்கும்போது, வேதாகம புத்தகங்களுக்கு சில தகுதிகள் இருக்கவேண்டுமென்று யூத மார்க்கத்தின் மதத் தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆகையால், ஒரு சில வரையறைகளுக்கு உட்பட்டே புத்தகங்கள் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றன.

- வேதாகமத்தின் புத்தகத்தை ஏதாவது ஒரு தீர்க்கதரிசி எழுதியிருக்கவேண்டும் அல்லது ஏதாவது ஒரு தீர்க்கதிரிசி அந்தப்புத்தகத்தை அங்கீகரித்திருக்கவேண்டும்.
- ஒரு புத்தகம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, எழுதப்பட்டது மற்றும் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெறுவதற்கு தகுதியுடையது என்று யூத ரபிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- இயேசு கிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் அந்த புத்தகங்களை அங்கீகரித்திருக்க வேண்டும். அதிலுள்ள வசனங்களை மேற்கோளாகப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.
- வேதாகம நூல்களின் ஆசிரியர்கள் தாங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலும் தெய்வீக அதிகாரத்தினாலும் இந்த புத்தகங்களை எழுதியிருப்பதாக அங்கீகரிக்க வேண்டும்.
- வேதாகமம் ஒரு வரலாற்று புத்தகமல்ல. ஆயினும், இது இஸ்ரவேலருடைய வரலாற்றை மிகவும் தெளிவாக கூறுகிறது. எனவே வேதாகம புத்தகங்கள் இஸ்ரவேலருடைய வரலாற்றை முரண்பட்டு கூறக்கூடாது.
- வேதாகம புத்தகங்கள் கூறப்பட்டுள்ள சத்தியங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருக்கவேண்டுமே தவிர, முரண்பட்டு இருக்கக்கூடாது.

இந்த அடிப்படையில்தான் பழைய ஏற்பாட்டிலுள்ள 39 புத்தகங்களும் தொகுக்கப்பட்டன.

## புதிய ஏற்பாட்டு ஆகமங்களின் அமைப்பு

இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் சபைக்கு உபத்திரவங்கள் ஒரு பக்கம் இருந்தாலும் சபையின் நிலைமை, ஸ்தாபன அமைப்பு, விசுவாசிகளின்

ஜீவியம் இவற்றில் முன்னேற்றமான நிலை காணப்பட்டது. இந்த நாட்களில் புதிய எற்பாட்டு ஆகமங்கள் ஆராயப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டன.

புதிய ஏற்பாட்டிலுள்ள புத்தகங்களை தேவனுடைய வசனமாக ஏற்றுக்கொள்வதற்கு கீழ்க்காணும் விதிமுறைகள் அல்லது அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன.

### a) அப்போஸ்தல முத்திரை (APOSTOLOCITY)

புதிய எற்பாட்டிலுள்ள புத்தகங்கள் அப்போஸ்தலர் எழுதின புத்தகங்களா? அல்லது அவருடன் ஊழியம் செய்தவர்கள் எழுதினதா? எனப் பரிசீலிக்கப்பட்டது.

### b)பொருளடக்கம் (SPIRITUALITY OF THE CONTENT)

எழுதப்பட்ட புத்தகத்திலுள்ள பொருளடக்கம். இது ஆவிக்குரிய தன்மையுடையதா? அல்லது ஆவிக்குரிய கருத்தை வெளியிடுகிறதா? என்று பரிசீலித்தார்கள்.

### c) யுனிவர்ஸாலிட்டி (UNIVERSALITY)

எல்லா சபையினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

### d)பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது (INSPIRED WORD OF GOD)

இந்தப் புத்தகம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்பதற்கு ஏதுவான தன்மையுடையதாக இருக்கிறதா?

கி.பி. 2-ம் நூற்றாண்டின் கடைசியில் புதிய ஏற்பாட்டில் உள்ள 20 புத்தகங்கள் மட்டும் அப்போஸ்தல அங்கீகாரம் பெற்றவைகளாக இருந்தது. (ஏற்றுக்கொள்ளப்படாத புத்தகங்கள் - எபிரெயர்,2,3 யோவான்,2 பேதுரு, யூதா, யாக்கோபு, வெளிப்படுத்தின விசேஷம்). கி.பி. 4-ம் நூற்றாண்டின் முடிவில் தற்போதுள்ள 27 புத்தகங்களும் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கி.பி.382-ல் ரோமாபுரியில் நடந்த “டாம்சைன்” (Damsine) ஆலோசனைக் குழுவில் வேதபுத்தகங்கள் யாவும் தேவ வசனமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கி.பி. 397-ல்

“கார்த்தேஜ்” யில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் வேதாகமத்தைக் குறித்த எந்த தர்க்கமும் இல்லை எனவும், முடிந்தது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 1. அப்போகிரிப்பா: **(APPOCRYPHAL BOOKS)**

எபிரெய பழைய ஏற்பாட்டில் இல்லாத 14 அல்லது 15 ஆகமங்கள் “அப்போகிரிப்பா” எனப்படுகிறது. இதையே தமிழில் “தள்ளுபடி ஆகமம்” என்று கூறுகிறோம். இந்த தள்ளுபடி ஆகமங்களில் பெரும்பாலும் ரோமன் கத்தோலிக்க வேதாகமத்தில் இடம் பெறுகிறது.

அப்போகிரிப்பா (Appocryphal) என்ற வார்த்தைக்கு“மறைவானது” அல்லது “இரகசியமானது”(Hidden or Secret) என்பது பொருள்.

### அப்போகிரிப்பா என பெயர் வரக்காரணம்:

எழுத்தாளர், எழுதப்பட்டகாலம், இந்தப் புத்தகங்கள் உருவான விதம் ஆகியவை திட்டமாய் தெரியவில்லை. எனவே இந்தப் பெயர் வந்திருக்கலாம்.

### தள்ளுபடி ஆகமங்களின் பெயர்கள்:

1. 1 எஸ்ட்றாஸ் - 1 ESDRAS
2. 2 எஸ்ட்றாஸ் - 2 ESDAS
3. தொபியாஸ் ஆகமம் - TOBIT
4. ஜூடித் ஆகமம் - JUDITH
5. எஸ்தரின் புத்தகம் - BOOK OF ESTHER
6. சாலொமோன் ஞானம் - WISDOM OF SOLOMON
7. பிரசங்கியின் புத்தகம் - ECCLESIASTUCUS (இது தற்போது பொது வேதாகமத்தில் உள்ளது அல்ல)
8. பாரூக் - BARUCH

9. 3 பரிசுத்தப் பிள்ளைகளின் பாட்டு –SONGS OF THE THREE HOLY CHILDREN

10. சூசன்னாளின் சரித்திரம் - HISTORY OF SUSANNCE

11. பெல் கடவுளும், வலுசர்ப்பமும் - BEL AND THE DRAGON

12. மனாசேயின் ஜெபம் - PRAYER OF MANASSEH

13. I, IIமக்கபேயர் - I, II MACCABEES

14. III, IV மக்கபேயர் - III, IV MACCABEES

15. எரேமியாவின் நிருபம் - JEREMIAH EPISTLE

கி.பி. 363-ல் லவோதிக்கேயாவில் நடந்த சபை தலைவர்களின் கூட்டத்தில் இந்தப் புத்தகங்கள் ஆவியினால் நிறைந்து எழுதப்பட்டவை அல்ல, எனவே தேவனுடைய வசனம் என்று இவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இவைகளை சபைகளில் உபயோகிக்கக் கூடாது எனத் தீர்மானித்தனர். இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தது கிரேக்க சபையார் ஆவர்.

ஆனால் கி.பி. 1546-ல் டிரண்ட் என்ற ஊரில் நடந்த கத்தோலிக்க ஆலோசனைக் கூட்டத்தில் இவைகளில் பெரும்பான்மையானவைகளை வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ள தீர்மானித்தார்கள்.

2. சூடோகிரிப்பா–**(PSEUDOCRYPHA)**

கள்ள எழுத்துக்கள் அல்லது கள்ள புத்தகங்கள் கி.மு. இறுதி நூற்றாண்டிலும், கி.பி. முதலாம் நூற்றாண்டிலும் இவை எழுதப்பட்டன. இவைகளுக்கு புதிய ஏற்பாட்டு அப்போகிரிப்பா என்ற மறுபெயரும் உண்டு. இவைகள் பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற வேண்டும் என்ற தவறான நோக்கத்துடன் இப் புத்தகங்களுக்கு வேதாகமத்தில் காணும் பெரியோர்களின் பெயர்களை சூட்டியிருக்கின்றனர். (உம்.) ஏனோக்கு, நோவா.

## தள்ளுபடி ஆகமங்கள் தள்ளுபடி செய்ய காரணங்கள்

1. இயேசு கிறிஸ்துவை (தேவன்) என்று 15 புத்தகங்களிலும் மையமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

2. நம்முடைய கர்த்தராகிய இயேசுகறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ இவைகளிலிருந்து எவ்வித ஒத்து வாக்கியமும் கொடுக்கவில்லை.

3. எபிரெய பழைய ஏற்பாட்டில் அது சேர்க்கப்பட தகுதியற்றது என்பதை ஆதிமுதலே யூத தலைவர்கள் தீர்மானித்திருந்தனர்.

4. பழைய ஏற்பாட்டின் புத்தகங்களின் அட்டவணையில் யூத வரலாற்று ஆசிரியர் ஜொசிபஸ் தள்ளுபடி ஆகமங்களைச் சேர்க்கவில்லை.

5. தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்பதற்குரிய அறிகுறி இந்த புத்தகங்களில் எதுவுமில்லை.

6. யேகோவா தேவனுடைய செய்தி என்று ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

7. சரித்திரத்திற்கும், வருடங்களுக்கும், நிலவியல் அமைப்பிற்கும், முரண்பட்ட காரியங்கள் இதில் காணப்படுகின்றன.

8. வேத வசனங்களுக்கு முரண்பட்ட உபதேசங்களும், பழக்கவழக்கங்களும் இவைகளில் கூறப்பட்டுள்ளது.

9. வேதாகம மொழி பெயர்ப்புகளிலும் இவை சேர்க்கப்படவில்லை. கி.பி 360ல் கூடிய Bible Council–லில் ஆகமங்களைச் சேர்க்கவில்லை.

10. இப்புத்தகங்கள் மற்ற 66 புத்தகங்களோடு ஒத்துப் போகாமல் முரண்படுகிறது.

**கேள்விகள்:-**

1. வேதாகமம் தேவனுடைய வார்த்தைதான் என்று நம்புவதற்கான ஆதாரங்கள் என்னென்ன என்பதை வரிசைப்படுத்திக் கூறுக.
2. வேதாகம புத்தகங்களின் தொகுப்பு என்பதனைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை சற்று விளக்கமாக கூறுக.

3. வேதாகமத்தின் 66 புத்தகங்களும் தொகுக்கப்படுவற்கு தேவ மனிதர்கள் குறித்திருந்த விதிமுறைகளை வரிசைப்படுத்திக் கூறுக.
4. புதிய ஏற்பாட்டின் புத்தகங்களை, தேவனுடைய வசனமாக ஏற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டதான அளவுகோல்கள் என்னென்ன என்பதை வரிசைப்படுத்திக் கூறுக.
5. தள்ளுபடி ஆகமங்கள் என்னென்ன என்பதனையும், அவைகள் தள்ளுபடியானதற்கான காரணங்கள் என்னென்ன என்பதையும் கூறுக.